# தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## முதலாம் ஆண்டு – இரண்டாம் பருவம்

## ஜனவரி – பிப்ரவரி 2025
## C031 தமிழகப் பண்பாட்டு வரலாறு

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு–2 இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகள் யாவை?
2. பெருஞ்சேரலாதன் வடக்கிருக்கக் காரணம் என்ன?
3. சிந்துசமவெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தவர் யார்?
4. சமணர் செய்த தானங்களைக் குறிப்பிடுக.
5. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி யார்?
6. கண்ணப்பரின் அன்பு பற்றி சிவபெருமான் கூறியது என்ன?
7. நீதிநெறி விளக்கத்தின் ஆசிரியர் யார்?
8. திருக்குறளில் இடம்பெற்றுள்ள இசைக்கருவிகள் யாவை?
9. தென்னாட்டில் போராட்டம் நடத்த யாரைக்கேட்க வேண்டும் என்று காந்தியடிகள் குறிப்பிட்டார்?
10. தமிழர் பண்பாட்டில் சிறப்புக் கூறுகளுள் இரண்டனைக் குறிப்பிடுக.
11. மந்திரம்,கழுவாய் ஆகியவற்றைப் பற்றியக் கருத்துகளை எடுத்துரைப்பவை யாவை?
12. 'கருணை இலா ஆட்சி கடுகி ஒழிக'எனப் பாடியவர் யார்?
13. 'தளி'–பொருள் என்ன?
14. பழைமையான இசைக்கல்வெட்டு எங்கு உள்ளது?
15. தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருள் மூன்றுக்கும் உரை எழுதியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. தமிழர்களின் உறைவிடம் குறித்து எழுதுக.
2. வைதீக சமயத்தால் தமிழ்ச்சமூகத்தில் ஏற்பட்ட தீமைகள் விவரிக்க.
3. தமிழ்நாட்டில் கிறித்துவ, இசுலாமிய சமயங்களின் தோற்றம் குறித்து எழுதுக.
4. சிலப்பதிகாரம் கூறும் பதினொரு ஆடல்களைப் பட்டியலிடுக.
5. தமிழ்நாட்டில் தொழிலாளர் இயக்கத்தின் தோற்றத்தினை எழுதுக.
6. பெரியார் காங்கிரசுக்கு ஆற்றிய பணிகளாகத் திரு.வி.க. கூறுவன யாவை?
7. வீரர் வழிபாடு குறித்து எழுதுக.
8. கைம்மை நோன்பு–குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பண்பாட்டு மாற்றங்களுக்கான காரணங்களைக் கூறி விளக்குக.

   (அல்லது)

   (ஆ) திருக்குறள் உணர்த்தும் வாழ்வியல் அறங்களை விளக்கியுரைக்க.

2. (அ) ஐரோப்பியர் வரவால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட நன்மைகளை விளக்கியுரைக்க.

   (அல்லது)

   (ஆ) தமிழ்நாட்டில் கிடைத்த கல்வெட்டுகளின் வரலாறு,அமைப்பு மற்றும் உள்ளடக்கம் குறித்து விளக்கியுரைக்க.

3. (அ) தமிழ்நாட்டின் வேளாண்மையும் வணிகமும் குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

   (அல்லது)

   (ஆ) தமிழரின் காதல் பண்பாட்டினை விவரித்துரைக்க.

❋ ❋ ❋